# இந்துசாதனம்

# THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

**பத்திரக் கிரயம்.**

| | |
|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: ஆ 1-க்கு | ரூ. 5-60 |
| வெளியூர், இந்தியா: ,, | ரூ. 9-40 |
| தொலைவாய்ப்பகுதி: ,, | ரூ. 9-40 |
| தனிப்பிரதி: | சதம் 6 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

**விளம்பர விகிதம்.**

| | | |
|---|---|---|
| முதன் முறைக்கு:— | ஒருகலம் | ரூ. 9-40 |
| ,, | அரைக்கலம் | ரூ. 5-00 |
| ,, | கால்கலம் | ரூ. 3-15 |
| ,, | ஒரு அங்குலம் | சதம் 65 |

அடுத்த முறைகட்கு டை விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மறுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—கடு. } யாழ்ப்பாணம்:—ருதிரோற்காரிஹு மாசிமீ௴ உகஉ (1924 மார்ஜ் 6) வியாழக்கிழமை { இலக்கம்—சஅ.


உ

**கணபதி துணை.**

சீர்பூத்த கருவிறா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பாம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்!
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்தவிநாயகன்றாள்வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.


யாழ்ப்பாணம்

## சைவபரிபாலனசபையாராற் பிரசுரஞ் செய்யப்பெற்ற

## புத்தக விளம்பரம்.

| | ரூ. ச. |
|---|---|
| முதற்பாலபாடம்(சித்திரசகிதமானது) | க0 |
| இரண்டாம் பாலபாடம் ,, | கடு |
| மூன்றும் பாலபாடம் ,, | உ0 |
| நான்காம் பாலபாடம் ... ... | ௩0 |
| ஐந்தாம் பாலபாடம் ... .... .... | ச0 |
| ஆறும் பாலபாடம் .... ... ... | ௫0 |
| கலாமஞ்சரி விளக்கத்துடன் | எடு |
| கிருட்டிணன் றாது, உரையுடன். | அடு |
| நமச்சிவாயமாலை, உரையுடன்... | ௩ |
| ஆத்திசூடி ... ... ... | ௩ |
| வெற்றிவேற்கையுரை ... ... | ௩ |
| வாக்குண்டாமுரை ... ... ... | ௩ |
| நல்வழியுரை .... ... ... ... | ௩ |
| நன்னெறியுரை ... .... ... ... | ௩ |
| இனியவை நாற்பதுரை (ஆங்கில மொழிபெயர்ப்புடன்)... ... ... | கஉ |
| இலக்கண வினவிடை... ... ... | க0 |
| நிகண்டு கக-வதும் கஉ-வதும்... | உடு |
| திருவாதவூரடிகள்புராண மூலம்... | உடு |
| திருச்செந்தூர்ப்புராணவுரை | |
| கிளேஸ்காகிதம் ... ... ... | க-உடு |
| நவ்காகிதம்... ... ... ... | க-00 |
| கந்தாலங்காரம் கந்தரநுபூதியுடன் | க0 |
| கந்தசஷ்டி கவசம் ... ... ... | ௩ |
| சுப்பிரமணியசுவாமி விருத்தம் ... | ௩ |
| ஆறுமுகசுவாமி விருத்தம்... ... | ௩ |
| பிள்ளையார்கதை ... ... ... ... | கஉ |
| கதிரைமலைப் பேரின்பக்காதல் ... | கஉ |
| பிரபஞ்சப் பெருவழக்கு ... ... | க0 |
| இந்துசமயி தாவரஜீவியாயிருத்த லேன்? ... ... ... ... ... | க0 |
| சாவித்திரி சரித்திரம்(புதியபதிப்பு) | ௪ |
| குமணசரித்திரம் ,, | ௪ |
| பஞ்சரத்தினத் திருப்புகழ் ... .... | ௩ |
| சோமவாரவிரதமான்மியம்... .... | க0 |
| கந்தவிரதமான்மியம் .... .... .... | க0 |
| சிவபூசைத்திரட்டு ... (புதியபதிப்பு) | கடு |
| மறைசையந்தாதி ... ... ... | உ0 |

ஒரேமுறையில் 25/ ரூபாவுக்குப் புத்தகம் எடுப்பவர்களுக்குப் 10 புத்தகத்துக்கு 2 புத்தகம் கழிவுகொடுக்கப்படும்.

முற்பணமனுப்புவோர் முத்திரையனுப்பாது போஸ்றல் ஆடரோனும் மணி ஆடரேனும் முத்திரைச்செலவுஞ் சேர்த்து வண்ணார் பண்ணைத் தபாலாபீசிற் பெறக்கூடியதாக அனுப்புதல்வேண்டும். இருபத்தைந்து ரூபாவுக்குக் குறைந்த ஆடர்கள் எம்மால் வீ பீ. யில் அனுப்பப்படமாட்டா.

சபையார் அச்சிட்ட புத்தகங்களன்றி ஏனைய புத்தகங்கள் இங்கு விலைக்குக் கிடையா.

சபையார் அச்சிட்ட புஸ்தகங்கள் வண்ணார்பண்ணை, S. S. சண்முகம், பிறிற்றுனியா ஸ்ரோர், சரஸ்வதி புத்தக சாலை முதலிய இடங்களிலும், பருத்தித்துறை S. P. சுல்த்தான் சிக்கந்தரிடத்திலும், வல்லுவெட்டித்துறை ந. வ. அரியகுட்டிப் பிள்ளை, வீ. எம். கந்தசாமி இவர்களிடமும் தக்க கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.

மானேசர்,
"இந்துசாதன" ஆபீஸ்,
வண்ணார்பண்ணை.

[ESTABLISHED 1909].

**MESSRS. A. S. M. A. KHADER BROTHERS**
**Kairul Muslimeen Medical Hall**
**PORTONOVO** (*South Arcot District*).

குழிக்கப்போய் சேற்றைப் பூசிக்கோள்வதுபோல்
வீண் ஆரவாரமான விளம்பரங்களைக் கண்டு மிரண்டுவிடாதீர்கள்.

அடியிற் கண்ட லேகியத்திற்காக ரூபா **1000** இனுமளிக்கப்படும்.

இந்த லேகியம் சாப்பிட்ட 3மணி நேரத்திற்கெல்லாம் சப்த தாதுக்களின் பலத்தையும் வீரிய உற்சாக தத்துவத்தையு மடைவிக்கச் செய்யவில்லையென்றுவது பரிட்சைசெய்யும் அன்பர்களுக்கு பலனைக் கொடுக்கவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் சொல்லுகிறவர்களின் பணத்தை உடனே வாபஸ் கொடுத்துவிடப்படும்.

அசல் பாகம் சந்தோஷிக்கச் செய்வது

உத்திரவாதமுள்ளது.

## சித்தஜானந்த சிட்டுக்குருவி லேகியம்.

இந்த லேகியம் முற்காலத்து மன்னர்களால் உபயோகித்து வீரியசக்தி குறையாது இல்லற இன்பவாழ்க்கையை யடைந்து புத்திர பவுத்திர சம்பன்னராய் நீடூழி வாழும்பொருட்டே நமது முன்னோர்களால் கூறப்பட்ட பழைய ஏட்டுப்பிரதிகளிலுள்ள ஔஷத பாகங்களிற் சிறந்ததும், இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களை அடையக்கூடியதுமான ஒப்பற்றஓர்புருஷசஞ்சீவியாகின்றது. மற்றவிபரங்களை நமதுகேட்லாக்கில்காணலாம்.

**லேகியத்தின் முக்கிய குணமாவது.**

வாத பித்த சிலேஷ்ம மிகுதி குறைவால் ஏற்படும் இரத்தக்குறைவு, ஏழுவகை தாதுக்களின் பலஹீனம், சுஸ்தி வெட்டைச்சூடு, பிரமேகவெட்டை, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, நீர்சுருக்கு, நீர்எரிச்சல், நீர்தாரை பெருத்தல் ஆகிய நோய்களையும், நித்திரையில் அடிக்கடி உண்டாகும் தாதுநஷ்டம், சித்திரைப்பங்கம், SPERMATORRHEA, தேகமெலிவு, சதாஇடுப்புவலி, கைகாலசதி, மலச்சிக்கல், பசிமந்தம், தேகத்தில் பலவிடங்களிலும் ஓடித்திரியும் பலவித வாய்வுகள், நெஞ்சுவலி, NERVOUSDISEASES, ஆகிய நோய்களை சுகப்படுத்தி, புதியமேனியுடன் இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களைப் பெறுவதில் இதைவிடச் சிறந்த மருந்து கிடைப்பது அரிதினுமரிது. இச்சிறந்த அபூர்வலேகியத்தின் ஆச்சரிய குணத்தை உடனேக்குடன் அறியவேண்டியதெவறே ஜனனுகூல நன்மைக்காகவே இதனை மிகவுங் குறைந்த விலைக்கு வெளியிட்டிருக்கின்றோம்.

40 நாள் சாப்பிடும் பெரியடப்பி 1-க்கு விலை ரூபா 8—0—0.
20 நாள் சாப்பிடும் சிறியடப்பி 1-க்கு விலை ரூபா 4—0—0.
வி. பி. தபால் செலவு பிரத்தியேகம்

முற்பணமனுப்பினால் V. P. தபால்செலவு இனும். பினங்கு, சிங்கப்பூர், கிள்ளான், கோலாலம்பூர், பேரா முதலிய பிறதேசவாசகர்கள் மருந்தின் கிரயமும், தபால்சார்ஜ ரூபா 2ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். ஷையூர்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.

இச்சிறந்த லேகியமானது சிட்டுக்குருவியின் கிருதம் அதாவது நெய்குருவியின் சத்தால் செய்யப்படவில்லையென்றுவது, அல்லது இந்த லேகியத்தைச் சாப்பிட்டால் குணமொன்றுஞ் செய்யவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் ரூபிப்பவர்களுக்கு அவர்கள் கொடுத்த மருந்தின் கிரயத்தையும் ரூபா 1000 இனுமாயும் கொடுக்கப்படும். அப்படி ரூபித்தும் இனுமடையப்பணத்தை கொடுபடாவிட்டால் கோட்டுமூலமாக வசூல்செய்துகொள்ளலாம். அதன்றியும் மற்றக் கம்பெனியாரின் இத்தகையான குருவிலேகியங்களுக்கு இப்படிப்பட்ட ஆச்சரிய குணமுண்டென்றுவது, அல்லது இச்சிறந்த குண பாக லேகியத்தை செய்து காட்டினுலாவது முன் கண்ட இனும் கொடுக்கப்படுமென்பதற்கு உத்திரவாதமளிக்கப்படும்.

Telegraphic Address
Khader Brothers
Porto-Novo.
(Y. 19,)

என் மேல்விலாசம்:—
மெஸ்ஸர்ஸ் ஏ. எஸ். எம். ஏ காதர் பிரதர்ஸ்,
கைறுல் முஸ்லிமீன் வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா.

## நாணயமான சரக்குகள்! சகாய விலை.

காசி பட்டுச் சேலைகள், ரவிக்கைகள், அப்பட்டாக்கள், வெண்பட்டு வேஷ்டிகள், உல்லன் போர்வைகள் முதலியன மிகவும் சகாயமான விலைக்கு அனுப்பப்படும்.

தமயந்தி மின்னல் கோடிச் சேலைகள். எல்லா லேட் கலர்களிலும் கிடைக்கும்.

16 முழம் நீளம் 2½ முழம் அகலம் உடலில்பட்டுப்பூவேலைகளுடன் ஜரிகைக் கட்டங்கள் வேலை செய்தது. சேலை 1க்கு ரு. 45 முதல் ரு 100 வரை.

கந்தரிப்பூ சேலைகள்.

16 முழம் நீளம் 2½ முழம் அகலமுடையது. விளிம்பில் 1½, 2 இஞ்ச ஜரிகையினால் கொடி செடி வேலையுடன் முந்தியில் 5 அல்லது 6 இஞ்ச உயர்ந்த ஜரிகையினால் பூ வேலைகள் செய்யப்பட்டது. சேலை 1-க்கு ரு. 80 முதல் ரு. 150 வரை.

"கேட்லாக்" இனும். உடனே எழுதுங்கள்.

பட்டு பீதாம்பர கம்பெனி,
காசி.

**Silk Pitamber Coy.,**
Pitamber Buildings,
BENARES CITY.

(Y. 27.)

**காகிநாடா சேலை.**

16 முழ நீளம்; 2½ முழ அகலம்.

இந்தச் சேலைகள் வெள்ளை மல்லேல் சிவப்பு, கறுப்புச்சேர்ந்த சாக்லெட் நிறம் போல், பூக்கள் புட்டாக்கள் போட்டு, சுற்றிலும் எழுத்துவேலையில் கரைகட்டியிருக்கும். இது புதுமாதிரி. இதுவரைக்கும் தயாரானதில்லை. விலை ரூபா 5—8—0.

**வெள்ளிக்கெண்டைச்சால்வை.**

5½ முழ நீளம்; 2½ முழ அகலம்.

இது மிகவும் நேர்த்தியாகவும் பளபளப்பாகவும் கைஸ் நூலினால் நெய்யப்பட்டதுமான சால்வை.

ஒரு இஞ்ச வெள்ளிக் கெண்டைப் பட்டையுள்ளது. விலை ரூபா 7—0—0.

விலாசம்:— கனக அண்டு கம்பெனி.
(Y. 18.) பார்க்டவுன் போஸ்ட், மதராஸ்.

அநேக பரிசு நற்சாக்ஷிகளும் பெற்ற மருந்துகள்.

## இழந்துபோன பலத்தை

ஒரு குளிகை சாப்பிட்ட 6 மணி நேரத்தில் கொடுக்கும்!!

**ஜீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை.**

**புஷ்டிக்கு கைகண்ட மருந்து.**

இதை இன்றே பரீட்சித்துப்பார்க்கவும்.

ஆச்சரியமான குணம்! மிக இன்பமான சுகம்!

புஷ்டியை உண்டாக்குவதில் இது எதற்கும் நிகரற்றது! எந்த மருந்தும் இதற்கு இணையல்ல! ஒரே குளிகையில் பரிக்ஷை பார்க்கலாம்! தளர்ந்துபோன நரம்புகளுக்கு முறுக்கேற்றும்! வீரியத்தைக் கெட்டிப்படுத்தும், இல்வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தைத்தருவதில் இதற்கு மிஞ்சின ஔஷதமில்லை.

150-மாத்திரை ரு. 10. 50-மாத்திரை ரு. 4-0-0
20-மாத்திரை ரு. 2. வி. பி. சார்ஜ்வேறு.

**பிரமேக நிவாரணி.**

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்தி செய்யும். பொறுக்க முடியாத வெள்ளை வெட்டை நீர்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தந்திமேகம் உடனே நிற்கும். புட்டி ரூபா 2.

**ரசமணி.**

சகல ஐசுவரியம், தனலாபம், அருள், கீர்த்தி, தொழில்விருத்தி, நினைத்தகாரிய சித்தி மென்மேலும் பெருகும், தொத்து நோய், அவமிருத்து தோஷம், மேகவியாதிகள் அணுகாது. உபயோகிக்கும்முறை மணியுடன் வரும். மணி 1-க்குரூபா 2. 6 மணி ரூபா 10.

பினங்கு, சிங்கப்பூர், நேட்டால், முதலிய தேசவாசிகள் முன் பணம் அனுப்பவேண்டும்.

☞ T. R. கருப்பண பிள்ளை,
வைத்தியசாலை,
(Q. 40) பழனி. S. I.

பல தலைமுறையாய் பிரபலபிரசித்தியடைந்த
வீ. ஸாமி அய்யங்காருடைய
**அறைக்கீரைவிரைத்தைலம்.**




**இதன் குணம்:**

பித்த மேகநீரானது சிரசுக்கேறி அதனால் கண்மறைப்பு, கண்ணெரிச்சல், கண்புகைச்சல், கண்ணிலிருந்து நீர்வடிதல், ஒருதலைவலி, இருதலைவலி, பீனிசம், காதினால் சீழ்வடிதல், காது இரைச்சல், காதுவலி, ஈக்தவருஷத்திற் குட்பட்டதாயும் இரைச்சலோடு கூடிய காதடைப்பு, கரப்பன், தேமல், சிரசில் மயிர் உதிர்தல், சொண்டுவிழுதல் முதலான ரோகங்களை நிவர்த்திப்பதுமன்றி மயிரை நன்றாய் வளரச்செய்யும். இந்த நோட்டீசில் காணப்படாத கழுத்திற்கு மேற்பட்ட சகல வியாதிகளையும் அனுகூலப்படுத்தும். மேற்கண்ட வியாதியில்லாதவர்கள் தேய்த்து ஸ்நானம்பண்ணினால் தேகத்திற்குக் குளிர்ச்சியையும் ஆரோக்கியத்தையுங் கொடுக்கும். வாரத்திற்கு இரண்டுதடவை காலை 8 மணிக்குள் வெந்நீரில் சீயாக்காய்தேய்த்து ஸ்நானஞ்செய்து யாதொரு பத்தியமுமின்றி உடனே போஜனஞ் செய்துகொள்ளவேண்டும். 8 நாள்வரையிலும் சுகந்தம் மாறாது. அன்று பகலில்மாத்திரம் தூங்கக் கூடாது. 10 பலங் கொண்ட புட்டி 1-க்கு கிரயம் ரூபா 1—10—0.

கும்பகோணம்
வி. எஸ். கோமளத்தம்மாள்,
மானிவுபாக்ஸரர்,
8, பிராமஸ் ரஸ்தா, மைலாப்பூர்;
(Y. 26.)

# இந்து சாதனம்

யாழ்ப்பாணம்:— ருத்ரோத்காரி௵ மாசி௴ 23௳ வியாழக்கிழமை.


## மகோற்சவ தாற்பரியம்.

சைவ வைஷ்ணவ ஆலயங்களில் வருடந்தோறும் துவஜாரோகண மாகி மகோற்சவம் நடைபெறுதல், ஆலயங்களில் நடைபெறும் நித்திய நைமித்திகமென்னு மிரண்டனுள் நித்தியத்தில் நேருங் குறைகளை நீக்குதற்பொருட்டும், ஜனசமூகத்தினர் வசதியாகச் சுவாமிதரிசனஞ் செய்யும்பொருட்டுமேயாமென ஆகமங்கள் கூறும். மகோற்சவம் பத்து நாட்களுக்கு நிகழவேண்டுமென்றும், அதற்குமேலில்லையென்றும், அப்பத்துநாள் உற்சவங்களும் தத்துவார்த்தங்களை யுடையனவென்றும் விம்பதந்திரமென்னும் உபாகமம் வரையறுத்துக் கூறும்.

பத்துநாள் நடைபெறும்உற்சவங்களுள் முதனாள் உற்சவம் தூலதேகத்தை நீக்கிக் கொள்ளும் பயனைக் குறிப்பதாகும். இரண்டாநாட் டிருவிழா தூலஞ் சூக்குமமென்னு மிரண்டினையும் நீக்கிக்கொள்ளும் பயனை யுணர்த்துவதாகும். மூன்றாநாள் உற்சவம் மூவினை முப்புத்தி முக்குணம் மும்மலம் முக்குற்றம் முப்பிறப்பு முப்பற்று என்னு மிவற்றை யொழித்தலைக் குறிக்கும். நான்காநாட் டிருவிழா நாற்கரணம் நால்வகைத் தோற்றம் என்னு மிவற்றை நீக்குதற் பொருட்டாம். ஐந்தாநாள் விழா பஞ்சப்பொறிகளும் பஞ்சாவத்தைகளும் பஞ்சமலங்களும் ஒழித்தற் பொருட்டாகும். ஆறுநாள் உற்சவம் காமாதியாறும் கலையாதி பதமுத்திகளாறும் வினைக் குணம் ஆறும் நீக்குவதைக் குறிப்பதாம். ஏழாநாள் விழா எழுவகைப் பிறப்பும் கலாதிகளேழும் மயாமலகுணமேழும் கடத்தற் பொருட்டாம். எட்டாநாள் உற்சவம் தன்வயத்தனுதல், தூயவுடம்பினனுதல், இயற்கையுணர்வினனுதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்கியிருத்தல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை என்னும் கடவுளின் எண்குணங்களையும் விளக்குவதாம். ஒன்பதாநாள் விழா சிருட்டி திதி சங்காரம் என்னும் முத்தொழிலும், சகளம் நிஷ்களம் சகளநிஷ்களம் என்னும் வடிவம் மூன்றும் தன்மை முதலிய மூன்றிடத்திருத்தலுமாகிய ஒன்பது மில்லையென்பதை விளக்குவதாம். பத்தாநாளுற்சவமாகிய தீர்த்தோற்சவம் சிவானந்தமாகிய பேரின்பப் பெருங்கடலிலே படிதலைக் குறிப்பிக்கும். இவைகளே பத்துநாட் திருவிளாவின் தாற்பரியமாம்.

ஒவ்வொருவரும் தாம் குடியிருக்கும் ஊரிலுள்ள ஆலயத்திலே மகோற்சவம் நிகழுங்காலத்தில் உற்சவவிரதமனுட்டித்தல் உத்தமமாகும். விரதமனுட்டிப்போர் தினந்தோறும் ஆசாரசீலராய் ஆலயத்தையடைந்து உற்சவதரிசனஞ் செய்து, பின்னர் ஒருபோது உண்டு விரதங் காத்தல் வேண்டும். எவரும் தாம் வசிக்கும் கிராமத்திலுள்ள ஆலயத்தில் மகோற்சவம் நடைபெறும்போது, அக்கிராமத்துள் சௌளம் அப்பியங்கனம் விவாகம் பிரயாணம் என்னு மிவற்றைச் செய்ய வொண்ணாதெனப் பெரியோர் கூறுவர்.

இக்காலத்திற் கோயிலதிகாரிகளாகவும் உற்சவம் செய்விப்போராகவுமுள்ள பலர் இவ்வுண்மைகளையுணராது உற்சவகாலங்களிலே தாசியர் நடனம் வாணவேடிக்கை முதலிய வீண் விஷயங்களிற் பணத்தைச் செலவிட்டு, மகோற்சவ காலத்தை உண்டாட்டுக் களியாட்டிற்குரிய கொண்டாட்டகாலமாகக் கொண்டு குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொள்வார்போலப் புண்ணியஞ் செய்யவே முயன்று அதனை யொழித்துப் பாவத்தை ஈட்டி மறுமையில் மீளாநரகிற் காளாகின்றனர். இனியேனும் நம்மனோர் இங்ஙனஞ் செய்து கெடுதலை விடுத்து, உற்சவங்களைப் பத்தியோடுஞ் சுத்தியோடும் நடத்தி இம்மை மறுமை இன்ப மிரண்டனையும் பெற்றுய்ய முயலுதல்வேண்டும்.

---

"அரைத்து மீந்தது அம்மி
சிரைத்து மீந்தது குடுமி"

என்பதற்கிணங்க, கிருஸ்தவப் பாதிரிகளால் கிருஸ்து மதத்தில் சேர்க்கப்படாமல் மீந்தவர்கட்கு 'ஹிந்துக்கள்' என்று பெயர். இப்படிக் கூறும்படியான நிலையில், அத்தனை தீவிரமாகக் கிருஸ்துமதப் பிரசாரம் நடைபெறுகிறதென்பதை எவரும் மறுப்பதற்கில்லை இலங்கைச் சட்டசபையில் சிறைக் கைதிகளை நல்லொழுக்கம் படியச்செய்தற்காக இரட்சண்ய சேனையென்ற கிருஸ்தவப் பாதிரிகளிடம் ஒப்புவிப்பதென்றும், அந்தச் செலவுக்காக 60 ஆயிரம் ரூபாய்வரை அப்பாதிரிகளுக்குத் தருவதென்றும் தீர்மானங் கொண்டுவரப்பட, அதை இலங்கைஜனப் பிரதிநிதியான கௌரவ ஸ்ரீ துரைசாமியவர்கள் ஆக்ஷேபித்து, பாதிரிகள் தங்களின் கிருஸ்து மதத்தையே போதிப்பரென்றும், சிறையில் ஹிந்துக்கள் முஸ்லிம்கள் பௌத்தர்கள் எனப் பல மதஸ்தர்கள் இருப்பதனால் ஒருமதச்சார்பான கிருஸ்து போதகம் கூடாதென்றும் எடுத்துக் காட்டினார். அதன்மேல் அந்த யோசனை நிறுத்தப்பட்டுப்போக, அதற்காக வருந்திய 'ஒருவர்' யாழ்ப்பாணம் 'உதயதாரகை'ப் பத்திரிகையில் ஸ்ரீ துரைசாமியவர்களைக் கண்டனஞ் செய்ய முற்பட்டனர். அக்கண்டனத்திற்கு யாழ்ப்பாணம் 'இந்துசாதன'ப் பத்திரிகை நல்ல சவுக்கடி கொடுத்திருக்கின்றது. 'எண்ணிய எண்ணம் என்னடி, அண்ணே என்று அழைத்த முறை என்னடி?'—யென்று இரட்சண்ய சேனையின் உட்கருத்தை நுணுக்கி ஆராய்ந்து 'இந்துசாதனம்' வினவுகின்றது'. —"பணம்" 22—2—24.

---

## உலகம் பலவிதம்.

சித்தபுருடர், காதில்ஏதோ உபதேசஞ் செய்தவுடன் நித்திரையாயிருக்க ஆடு துடித்துப் பதைத்து எழுந்து கட்டியிருந்தகட்டையை மூன்றுமுறைசுற்றித் தலையையும் திருப்பி மேலே பார்த்து சந்தியது. விடிவெள்ளி உதயமானவேளை யாதலினால் ஆட்டுக்கொட்டிலின் மேலுள்ள மாமரக் கொம்பில் இருந்த சேவல் தன் செட்டைகளை மூன்றுதரம் அடித்துக் கூவியது. "அட பயித்தியமே, நாளைக்கு வருவதை நினையாமல் ஏன் சந்தோஷப்பட்டுக்கூவுகிறாய்; எசமானன் என்னையும் உன்னையும் வளர்ப்பது எங்கள்மேற் கொண்ட அன்பினாலென்று நினைக்கிறாய்? அடுத்தமாதம் கோயிலிற்கொண்டுபோய்க் கதறக்கதற வெட்டிக் கொன்று எங்கள் சவத்தை பிரசாதமென்று விழுங்குவதற்குத்தானே. சிநேகிதா நானும் உன்னோடுதான் சாகிறது. அந்தப் பாழும் பிரமன் எனக்கும் உனக்கும் ஒரு இறுக்காய்க் கிறுக்கிவிட்டான். நான்தான் கட்டின கட்டில் நிற்கிறேன். இக்கட்டையறுத்துக் கொண்டு ஓடவும் முடியாது. உனக்கோ கட்டுமில்லை, காவலுமில்லை. எங்கேயாவது ஓடிப் பிழைத்துக்கொள்ளேன். உன்னைப்போல என்னைக் கட்டாமலும் விட்டு, உனக்கிருப்பதுபோல் இரண்டு சிறகும் இருக்குமானால் என்னைப் பிடிக்கிறதற்கு நீயல்ல, உன் எசமானல்ல, உன் அப்பன் வந்தாலும் முடியாது. அதிகம் பேசி என்ன; என்பாடும் நாளைக்குப் படுகொலைதான். ஆனால் என்னுடைய உடம்பிலிருந்து விழும் இரத்தத்தின் ஒவ்வொரு துளியும் என்னை வெட்டும் சண்டாளனுடைய இருபத்தொரு தலைமுறையையும் நாசப்படுத்தி எனது இரத்தஞ்சிந்தியுள்ள ஊரையும் பஸ்மீகரப்படுத்தும்" என்று கூறியது.

* * *

ஆடு பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்த சேவலானது "சிநேகிதா! என்னையும் ஒரு பறவையென்று நினைக்கிறாய்? சிலர் பெருமைக்காகப் பட்டங்களைப்பெற்றுத் தங்கள் பேருக்கு முன்னும் பின்னும் (ஒரு உபயோகமின்றி) கட்டித் தூக்குவது போல நானும் இரண்டுபக்கமும் இரண்டு செட்டைகளைக் கட்டித் தூக்கிக்கொண்டு, திரிகிறேன். இந்தஇழவு இல்லாவிட்டால் நான் அருமந்தாற்போல எவ்வளவோ சுகமாயிருப்பேன். ஒவ்வொருநாளும் பொழுதுபட இந்தமாத்திலேஏறுவதற்கு நான் படும்பாடு கொஞ்சமா? ஆறுதரம் சுற்றி, நூறுதரம் கொக்கரித்து, கீழ்க் கொப்பிலேறி, அடுத்த கொப்பிலிருந்து மற்றக்கொப்பிற் பறந்து எவ்வளவோ கஷ்டப்படுகிறேன். இது ஒருபுறமிருக்க எசமானன் தன்னுடையமகனைத் தம்பி! தம்பி!! என்றழைப்பதுபோல என்னையும் ஒவ்வொருநாளும் ப்ஆ! ப்ஆ!! என்று ஆதரவுடனழைத்து அரிசிபோடுகிறார் நானும் அவருக்கு ஒரு பிள்ளைதானே; என்னை அவர் வெட்டினால் பிள்ளையைவெட்டிய பாதகம் அவரைச் சேருமே. தெண்டித்தால் எப்படியும் விலகிக்கொள்ள வழியுண்டு. என்னுடையஎசமானன் தான்வளர்த்த பிள்ளையென்றுநினையாது கொல்வாராயினும் இவ்வளவுநாளும் அவர் எனக்குச் செய்த நன்றியை மறக்கமாட்டேன். நன்றி மறந்து நரகத்துக் காளாவதிலும் எஜமானனுக்கிரையாவதே தக்கது. ஒருவன் அரசனின் கீழுள்ள நீதிபதியைக் கொலை செய்துவிட்டு அரசன் முன்னிலையிலே ஒடுக்க வணக்க மரியாதையுடன் சென்று சில நன்மைகளைப் பெறவேண்டியிருப்பதுபோல, சர்வலோக அரசாகிய பரமேசுவரரின் கீழ் உள்ளவராகிய எனது எஜமானன் என்னை அந்த ஈசனின் அடியானென்று கொஞ்சமும் மதியாது கொலை செய்துவிட்டு, அவருடைய சந்நிதானத்தில் பல நன்மைகளைப் பெற விரும்பி நெக்குநெக்குருகிக் கண்ணீர் விடுவாராயின் இதுபோன்ற விஷேசம் வேறென்ன? அப்பெருமானுடைய கருணை ஒருபோதும் அவருக்குக் கிடைக்கப்போவதில்லை எனக் கூறியது.

* * *

"நீ எவ்விதமான ஞான உபதேசஞ் செய்தாலும் அந்த முழுமூடர்களுக்கு ஒருபோதும் உணர்ச்சி வரமாட்டாது. ஞானமும் கல்வியும் கனின்ற நூல்களும் ஈனருக்கு உரைப்பதில் இடரே வந்து சேரும். எனக்கும் சித்தபுருஷருடைய உபதேசத்தின்பின்தான் இந்த உலகம் பலவிதம் என்று தெரிகிறது. இருந்தாலும் அந்தச் சித்தபுருஷருடைய அருளினால் நான் வெறியர் வெங்களத்துக்குக் கொண்டுபோகப்பட்டு, சிவனுக்கு இரங்காது சிவனுக்கு இரங்கும் படுபாதகனாகிய வேன்மகனுக்கு இரையாகாது தப்பி உய்ந்து கொள்ளும் வழியைத் தேடிக்கொள்வேனென்று நினைக்கிறேன். கடவுளுடைய திருவருளினால் ஒரு உய்வழி கிடைக்குமாயின் அந்த வழியைப் பிடித்துக்கொண்டு நான் மாத்திரம் உய்ந்து கொள்ளாது என் சிநேகிதா! உன்னையும், உன் சகோதரர்களையும், எனது சகோதரர்களையும், ஊர் அற்று, உறைவிடமற்று, பேர் அற்று, பெருமையற்று, சந்ததியற்று அட்டைக் கிடங்கின் அடிக் கிடங்குக்குப் போக வழிதேடும் பாதகர் கையிலிருந்து மீட்பதற்கு என்னால் ஆனமட்டும் பாடுபடுவேன். இது சத்தியம்" என்றுசித்தபுருஷரின் உபதேசத்தைப் பெற்ற அந்த ஆடு கூறியது.

---

## சமாசாரம்

வண்ணை வயித்தீசுவர சுவாமிகோயில் மகோற்சவாரம்பம்:—இவ் ஆலயத்தில் இந்த ௴ 20ந் திகதி திங்கட்கிழமை துவஜாரோகணமாகி உற்சவம் வழக்கம்போல நடைபெறுகின்றது.

பின்னுமொருவன் கரடியாகிச் சுடுபட்டமை:—இருவர் காலியில் வேட்டையாடும் பொருட்டு காட்டினுட் பிரவேசித்துப் பிரிந்து சென்றபின் ஒருவன் மற்றவனைக் கரடியென்று நினைத்து சுட்டுக் கொன்றுவிட்டான்.

பிசாசினால் நேர்ந்தமரணம்:-வெளிக்கடையிலுள்ள சம்பியில்லாத்தந்தி ஆபீசைச் சூழ்ந்த வயல்களில் ஒரு பிசாசு திரிகிறதென அங்குள்ள சனங்கள் சிலநாட்களாகத் திகில் கொண்டிருந்தனர். ஒருநாள் அங்குள்ள கால்வாயில் மீன்பிடிக்கச்சென்ற ஒரு சிங்களவன் அப்பிசாசினால் பயமுறுத்தப்பட்டு பிரக்ஞையற்று அவன் வீட்டுக்குக் கொண்டுபோகப்பட்டு மூன்றுநாட்களின் பின் இறந்துவிட்டான்.

---

### நூல்களைப்பற்றிய குறிப்பு.

ஆரோக்கிய தீபிகை:—இது மாசந்தோறும் சென்னையிலிருந்து சஞ்சிகை ரூபமாகச் சித்திரவிளக்கத்தோடு வெளிவரும் ஒரு அழகிய தமிழ்ப் பத்திரிகையாகும். இதன்கண் தேகாரோக்கிய விஷயமாகவும் வைத்திய விஷயமாகவும் எழுதப்பட்ட பல அரிய வியாசங்கள் காணப்படுகின்றன. குடியினால் விளையுங் கேடு என்ற வியாசம் அதிநுட்பமாகச் சித்திரங்களுடன் எழுதப்பட்டிருக்கின்றது. இதன் ஆசிரியர் டக்டர். யூ. ராமராவ் (M. L. C) அவர்களாவர். நோயற்ற வாழ்வை விரும்பும் ஆடவராலும் பெண்களாலும் இப்பத்திரிகை படிக்கற்பாலது. வருடச்சந்தா ஒன்றரை ரூபா. மேல்விலாசம் ஆரோக்கிய தீபிகைப்பத்திரிகாலயம் 323 தம்பு செட்டி வீதி, சென்னை

உத்தம மித்திரன்.—இது ரங்கூனிலிருந்து தினந்தோறும் வெளிவரும் ஒரு சமாசாரத் தமிழ்ப்பத்திரிகையாகும் இதன் கண் இந்தியா இரங்கூன் என்னும் நாடுகளின் ஈடேற்றத்திற்கானபல அரியவியாசங்களும் மற்றும் சமாசாரங்களும் காணப்படுகின்றன. பத்திராசிரியர் ஸ்ரீ கா. பரமார்த்தசர்மா அவர்களாவர். விலாசம், மனேஜர், உத்தம மித்திரன் ஆபீஸ், 26,31வதுவீதி ரங்கூன்.

தேச சேவகன்.—இது புதுச்சேரியிலிருந்து மங்கலவாரந்தோறும் வெளிவரும் ஒரு தமிழ்ப் பத்திரிகை தேசபக்தி விவசாயம் கைத்தொழில் முதலியவற்றைக் குறித்த வியாசங்கள் இப்பத்திரிகையில் நுட்பமாக எழுதப்பட்டுள்ளன. புத்திவிருத்திக்காகிய கதைகளும், சித்திரங்களும் பிறவும் இதன்கண் அடங்கியுள்ளன. பத்திரிகை டெமி நான்கு பக்கப் பிரமாணமுள்ள 24 பக்கங்களை யுடையதாகச் சஞ்சிகை ரூபமாக வெளியிடப்பெற்றிருக்கிறது. நமது இந்துசாதனத்தில் இற்றைப்பிரசுரத்தில் "லஞ்சப்பிரீதி" என்னும் வியாசத்தை இப்பத்திரிகையிலிருந்து அறவிடுகின்றோம். வருடச்சந்தா ரூபா 6. விலாசம், 'தேசசேவகன் ஆபீஸ்' புதுச்சேரி.

இந்திய விவசாயம்:—இது திருச்சினாப்பள்ளியிலிருந்து வெளிவரும் ஒருமாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை. இதில் அரிய விவசாய விஷயங்களும் வேறுபல வியாசங்களும் சமாசாரங்களும் காணப்படுகின்றன. இதன் வருடச்சந்தா ரூபா 1 பணம் 8 விலாசம், மனேஜர், "இந்திய விவசாயம் ஆபீஸ்" தெப்பக்குளம் போஸ்டு, திருச்சினாப்பள்ளி.

எமக்குதவிய பிரதிகளை நன்றியறிதலுடன் உவந்தேற்கும்.

## இந்திய சமாசாரம்.

### ஜோசியம்

மகாத்மாவுக்கு இப்பொழுது ராகுதிசையில் கேதுபுத்தி நடைபெறுகிறதாம்.

1925-ம் வருஷம் மார்ச்சு மாதத்திற்குள் இந்தியாவில் அநியாயச் சட்டங்களெல்லாம் அழிந்துபோம்.

இந்தியர்கள் அதிகாரப்பதவிகளை அதிகமாகப் பெறுவார்கள்.

1926-ம் வருஷம் அக்டோபர் மாதம் 7-ந் தேதிக்குள் இந்தியர்கள் கேட்கும் சுயராஜ்ய உரிமைகள் கிடைத்து விடும் என்று தண்டலம் குப்புசாமி ஐயங்கார் ஜோசியம் சொல்லுகிறார்.

### அமெரிக்கர் நூல் நூற்கிறார்.

சில காலத்திற்குமுன் இந்தியாவுக்கு வந்தவரும் காக்கி நாடாக் காங்கிரசில் கதருடையை மேற்கொண்ட வருமான பீட்டர் சாவிட்ஸ்கி என்ற அமெரிக்கர் தெலுங்கு நாட்டில் ஒருநாட்டுப்புறத்திலுள்ள ஓர் ஆசிரமத்தில் வாழ்ந்து வருகிறார். அவர் தினந்தோறும் இரண்டு மணி நேரம் நூல் நூற்றுவருகிறார். தனது உணவுகளைத் தானே சமையல் செய்து கொள்ளுகிறார். இன்னும் சில காலத்திற்குள் தாம் நூற்றநூலைக் கொண்டு நெய்த துணியையே தமது உடையாகக் கொள்ளமுடியுமென்று அவர் சொல்லுகிறார்.

### ஜெயித்தோப் படுகொலை.

ஜெயித்தோவிலுள்ள குருத்வாராவுக்குச் சென்ற அகாலியர்களில் சிலரை நாபா சமஸ்தான அதிகாரிகள் சுட்டு வீழ்த்தி விட்டார்கள். 14-பேர் இறந்தும், 34-பேர் காயமடைந்தும் போனார்கள். சத்தியாக்கிரகத்தை மேற்கொண்டிருக்கும் அகாலி வீரர்களை நாபா அதிகாரிகள் சுட்டு வீழ்த்தியதற்கும் ஜாலியன்வாலாத் தோட்டத்தில் கூடியிருந்த நிராயுதபாணிகளும் நிரபராதிகளுமான ஜனங்களை ஒட்வியர் சுட்டு வீழ்த்தியதற்கும் வித்தியாசமில்லை. ஓட்வியருக்காவது ராணுவச்சட்டம் என்று ஒரு புகல் இருந்தது. நாபா அதிகாரிகளுக்கு அது இல்லை இதுபற்றி இந்தியச்சட்டசபையில் பண்டிதர் மாளவியா கேள்வி கேட்க விரும்பிய பொழுது அது சுதேசசமஸ்தானத்தில் நடந்தசம்பவமென்று அக்கிராசனர் சொல்லி விட்டார். கொலையுண்டவர்கள் பிரிட்டிஷ் இந்தியப் பிரஜைகள் என்று சொன்னதை அவர் கவனிக்க வில்லை. பண்டிதர் மாளவியாவும் வேறு சில சுயராஜ்ய வாதிகளும் கோபமடைந்து விட்டு வெளியே வந்து விட்டார்கள். மகாத்மா சீக்கியர்களுக்கு ஓர் அனுதாபச் செய்தி அனுப்பியிருப்பதுடன் தேசத் தலைவர்கள் யோசித்து முடிவுசெய்யும்வரை ஜெயித்தோவுக்குச் சீக்கியர்கள் செல்லுவதை நிறுத்த வேண்டுமென்றும் அஹிம்சாதர்மத்தைத் திரிகரணங்களினாலும் கொள்ளவேண்டுமென்றும் வற்புறுத்தி யிருக்கிறார்.

"லோகோபகாரி"

---

## கடிதம்.

காரைநகர்
ஆயிலிசிவஞானோதயவித்தியாசாலையும்
கௌரவ. ஸ்ரீமான். வை. துரைசுவாமி
அவர்களும்.

நிகழும் ருத்ரோத்காரி௵ மாசி௴ 14௳ (26-2-24) செவ்வாய்க்கிழமை காரைநகர் ஆயிலிசிவஞானோதய வித்தியாசாலையில் கௌரவ ஸ்ரீமான் வை. துரைசுவாமியவர்களை குறித்த வித்தியாசாலையின் முன்னேற்றத்திற்காக உழைக்கும் அதன் தலைவரும் ஆசிரியரும் கேட்டுக்கொண்டபடி சமுகமளித்து பிரசாரஞ்செய்வாரென்று அறிந்த காரைநகர் வாசிகள் அவரைச் சந்திக்கவும் அவர் பேசுவதைக் கேட்கவும் விரும்பினராய் அவர் வரவை எதிர்பார்த்திருந்தனர் குறித்ததினம்நமது பிரதிநிதியவர்களும் அவர்சிநேகிதரும் மோட்டர்ரதமூர்ந்து காரைநகர் வாசிகசாலைக்கணித்தானவுடன் அவர்வரவை எதிர்நோக்கி நின்ற குறித்த பாடசாலை மாணாக்கரும் அதன் ஆசிரியரும் தலைவரும் நல்லுபகாரிகளும் இன்னும்மேனாதோர் குடை கொடி ஆலவட்டங் கொண்டவர்களும் எள்ளிட இடமின்றி நெருங்கி நின்றனராகக் குறித்த நம்பிரதிநிதியார் இரதத்தினின்றிழிந்து தம்மைவரவேற்கவந்து நின்றவர்களின்மீது கருணைபாய்க் கண்ணோக்கி தமது பெருந்தன்மையையும் நன்றியையுங்காட்டினராக அவர்களுடன் கூடி நடந்து ஏறக்குறைய அரைமயிலுக்கப்பாலுள்ள குறித்தசிவஞானோதய வித்தியாசாலையை அடைந்தனர். வித்தியாசாலையின் உள்ளும் புறம்பும் நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்தன. அத்தாவக்காத் ஸ்ரீ இராசரத்தினமவர்களும் பிறக்டர் ஸ்ரீ கிசைநாயகமவர்களும் இருமருங்கும் அமர நம்மருமைப் பிரதிநிதியார் நடுநாயகமாய் அவர்கள் மத்தியில் இருந்தனர். வந்துகூடியோரைத் தன்னிடத்தடக்கு மாற்றல் குறித்த வித்தியாசாலைக்கில்லையாக எஞ்சினோர் புறத்தே நிற்கவேண்டியவராயினர். பிரமஸ்ரீ விசுவநாதையரால் பரிமளாங்கமழும் சந்தனமாலை கௌரவ அங்கத்தினர்க்குச் சூட்டப்பட்ட பின்னர் தேவாரத்துடன் கூட்டம் ஆரம்பமாயிற்று. பாடசாலையின் முன்னேற்றத்தையும் நம் சமயவிருத்தியையுங் குறித்து பாடசாலைமாணவர்களால் மனனப்பிரசாரணம் பேச்சு முதலியன நடைபெற்றன பாடசாலையின் சென்றகாலச்சரித்திரம் வித்தியாசாலையின் தலைமை ஆசிரியர் ஸ்ரீ சி. ஆறுமுகம் அவர்களால் கூறப்பட்டது,

"சைவப்பிள்ளைகளும் சமயகல்வியும்" என்ற விஷயத்தின் பேரில் அத்தலக்காத் இராசரத்தினமவர்கள் விரிவாயோர் உபந்நியாசஞ் செய்தனர். பின்னர் அக்கிராசனர் நமது சமயத்தின் முன்னேற்றத்தையும் நம்பிள்ளைகள் நமதுகலாசாலையிலேயே சற்கப்பட வேண்டும் என்பதையும் பற்றி நன்கு விளக்கி மிக விரிவும் ஆழமுமான ஓர் உபந்நியாசஞ் செய்தனர். அப்பிரசாரணத்தால் சம்மவரனைவரும் புதுப்பெலன் பெற்றோர்போல மிக மகிழ்ச்சி மடைந்தனர். ஈற்றில் பிரக்ரர் ஸ்ரீ திசைநாயகம் பாடசாலை மானேஜர் ஸ்ரீ ப. சண்முகம் என்போரால் குறிப்புரை கூறப்பட்டது. கூட்டம் இரா 9 மணிபோல் தேவாரபாராயணத்துடன் சமாப்தியாயிற்று. எல்லாம்வல்ல பரம் பொருளாகிய சிவபெருமான் இவ்வித்தியாசாலையானது மேனிலையடையக் கிருபைபாலிப்பாராக.

—கடிதம்.

## வதிரி தேவரையாளிச் சைவவித்தியாசாலைப் பரிசளிப்புக்கொண்டாட்டம்.

இவ்வித்தியாசாலையில் இகழும் ருதிரோற்காரிவருடம் மாசி௴ ௧0௳ (22-2-24) வெள்ளிக்கிழமையிரவு 6½ மணிதொடக்கம் 10மணிவரையும் நடைபெற்ற கூட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தலைமையாசிரியர் ஸ்ரீஎம் சபாரத்தினசிங்கம் பீ. ஏ. அவர்கள் அக்கிராசனத்தின்மர பரமேஸ்வரக்கல்லூரி ஆசிரியர் பிரமஸ்ரீ. இராஜகோபால் எம். ஏ. அவர்கள் இக்கல்லூரி ஆசிரியர் ஸ்ரீ வி. முத்துக்குமாரு எம். ஏ. அவர்கள், இப்பாடசாலைமனேஜர் ஸ்ரீ சி. சபாபதிப்பிள்ளையவர்கள் கோப்பாய் அரசினர் போதனா வித்தியாசாலை ஆசிரியர் ஸ்ரீ சி. தா. சிதம்பரப்பிள்ளையவர்கள், யாழ்ப்பாணம் கொப்பிக்கந்தோர்லிகிதர் ஸ்ரீ சி. ஆறுமுகம்பிள்ளையவர்கள் தலாலேனர் இவ் அக்கிராசனர்க்கிருமருங்கிலுமமரஅல்வை பிரபல்யதனவந்தர் ஸ்ரீ கா. வாரித்தம்பி யவர்கள் ஸ்ரீ மு அழகரத்தினமவர்கள், நெல்லியடி பிரபலவர்த்தகர் ஸ்ரீ சி. ஆறுமுகம் பிள்ளையவர்கள், வர்த்தகர் ஸ்ரீ க. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள் கிராம அங்கத்தவர் ஸ்ரீ க. வல்லிபுரம் பிள்ளையவர்கள், மிஷன்பாடசாலைத்தலைமை ஆசிரியர் மிஸ்டர் கந்தவனம் அவர்கள், கரவெட்டி சப்போஸ்ட் தலைவர் ஸ்ரீ க. சின்னையபிள்ளையவர்கள், விக்கினேஸ்வரக்கல்லூரி ஆசிரியர் ஸ்ரீ ஆ. வேலாயுதபிள்ளையவர்கள், ஸ்ரீ அ. தம்புஉபாத்தியாயரவர்கள், காவியப்பாடசாலை ஆசிரியர் ஸ்ரீ அ. கணபதிப்பிள்ளையவர்கள்முதலானோர் இன்னும் பலரும் பல இடங்களிலுமுள்ள ஆங்கிலமாணவர்களும் அடுத்தபாடசாலைமண்டபத்தில் அநேக பெண்களுங் குழுமிச் சமுகமளித்தனர். தேவாரபாராயணத்துடன் கூட்டம் ஆரம்பமாயது பின்னர்ப்பாடசாலை மாணவர்களறுவராற்தர்க்க சம்பாஷணையும் ஒரு மாணவனுல் மனனபிரசங்கமும் இரு மாணவிகளாற்தர்க்க சம்பாஷணையும் நடைபெற்றது. இடையிடையே இப் பிள்ளைகளால்வீணைவாத்தியத்துடன் பாடசாலை நாமம் பூண்ட சங்கீதம் பாடப்பட்டது பின்பு அப்பாடசாலைச் சபையாராகிய கொழும்பு வியாபாரிகள் ஐ. ஆறுமுகம் வெ. வல்லிக்குட்டியென்பவர்களாற் கணிதத்திற் சித்திபெற்ற பிள்ளைகளுக்குச் சிலேற்றுடன் பென்சில்களும், குருநாக்கல் வியாபாரி சி. க. ஆறுமுகமென்பவரால் வாசிப்பிற் சித்தியடைந்தபிள்ளைகளுக்கு சைவபரிபாலனசபையாரின் வாசினைப் புத்தகங்களும், இரத்தினபுரிவியாபாரி க.வ.கந்தையாவென்பவரால் எழுத்திற் சித்தி பெற்றபிள்ளைகளுக்குச் சோடி வீதங்கொப்பிகளும், கீர்கொழும்பு வியாபாரி வே. இராமலிங்கமென்பவரால் வகுப்புக்களுக்கேற்ற பூமிசாஸ்திரப் புத்தகங்களும், மாத்துறைவியாபாரி கா. சின்னத்தம்பி யென்பவரால் 30 பெண்பிள்ளைகளுக்கு சித்தை, காரிக்கன் புடவைகள், ஊசி, நூல், நிதாள் முதலிய தையலுபகரணங்களும், காலிவியாபாரி க. மு. சின்னத்தம்பி நாள் 200 க்குக்குறையாத 10 பிள்ளைகளுக்கு அவர்களது வகுப்பிற்கியைந்த புத்தகங்களும் வேதாரணியம் ஆதீனகர்த்தருளொருவராகிய சுரண்வாய் பிரமஸ்ரீ. சி. குமாரசுவாமிக் குருக்களவர்களால் இப் பாடசாலையின் முதல்மாணுக்கனுகக் கண்ட மு. செல்லையாவுக்கு உபயோகமான 5 ரூபா பெறுமதியுள்ள மூன்று புத்தகங்கள் உபகரிக்கப்பட்டன ஆவை மேற்படி அக்கிராசனுதிபதியவர்களாற் பரிசளிக்கப்பட்டது. அத்துடன் பாடசாலைக்குரிய இ வயிரமுத்து வென்பவராற் சிவராத்திரிபுராணபடிகதிப்படம் ஒவ்வொன்றும், ஐ. வ. சிவகுரு வென்பவரால் ஒருரூபா 25 சதம் பெறுமதியான இயற்கைப் பொருள் விளக்கப் புத்தகமும். குருநாக்கல் பிரபலவர்த்தகர் ஸ்ரீ ஆர். முத்துச்சாமிநாயுடு அவர்களாற் 10 ரூபா பெறுமதியான 2 கதிரைகளும் மேற்படியூர் தபாற்கந்தோர் வேலைபார்க்கும் எஸ் காளிமுத்து வென்பவரால் 5 ரூபா பெறுமதியான 2 கதிரைகளும், பருத்தித்துறை புத்தக வியாபாரி சு. பி. சுல்த்தான் சிக்கந்தரென்பவரால் 6 தோத்திரத்திரட்டுகளும் பாடசாலைக்கு உதவப்பட்டபின்பு சபாநாயகரது பிரேரிப்பின்படி மேற்படி பாடசாலை மனேஜர் ஸ்ரீ சி. சபாபதிப்பிள்ளையவர்களாற் பாடசாலையின் ஆதிதொட்ட நிகழ்ச்சிகள் கூறப்பட்டன 2 வது இவ் லிகிதர் ஸ்ரீ சி. ஆறுமுகம்பிள்ளையவர்களாற் கனம்பொருந்திய சபாநாயகம் முதலியோரைச் சபையாருக்கு விளக்கப்படுத்தியும் இன்னுமிவர்களைப் போன்ற பலரிங்கே வாவிருந்தும் தருணமற்று விட்டனரென்றும் அதிலுலவர்கள துக்கமடைவார்களென்றும் இன்னும் இப்பாடசாலை உச்சத நிலைபடையுமென்றுங் கூறப்பட்டது.

3. வது பிரமஸ்ரீ இராசகோபாலு அவர்களால் தாமிப் பாடசாலைக்கு வரநேர்ந்ததும் இந்தச் சாதியத்தாருக்கு மிப்படியான ஓர் பாடசாலை சுயாயத்துட னிலவைமிலுமிருப்பதும் தமக்கு அதிசயத்தைக் கிடமானதென்றும் தாமோர் பிராமணராயிருந்து தமக்கிப் பாடசாலையிருக்கும் அநுதாபத்தைக் காண்பிக்க வந்தேனென்றுந் தாமிங்கே பேசவேண்டிய விஷயங்களை இப் பாடசாலைப் பிள்ளைகள் சம்பாஷணையிற் கொண்டுவந்து விட்டார்களென்றும் இப் பிள்ளைகளனைவருக்கும் நாவிலே சரஸ்வதி வீற்றிருக்கிறளென்றும் தாம் மகாத்மா காந்தியடிகளைப் பின்பற்றிய ஓர் தேசபக்தனென்றும் பாடசாலையையும் வியந்தும் கூறப்பட்டது.

4 வது பரமேஸ்வரக் கல்லூரி ஆசிரியர் ஸ்ரீ வீ. முத்துக்குமாரு எம்.ஏ. அவர்களாலிப் பாடசாலையிற் தமக்குமுள்ள அநுதாபத்தைக் காட்ட வந்தேனென்றும் தாழ்ந்த சாதியாருக்குப் புத்தி குறைவென உயர்ந்தசாதியார் எண்ணிக்கொள்வது தவறென்பதை இப்பாடசாலைப் பிள்ளைகளின பேச்சு, கீதம் முதலிய கிரியைகளிலிருந்து நாமெல்லாரு மறிந்துகொள்வது முக்கியமென்றும் இப்பாடசாலையின்னும் உந்நதமடைய பாடசாலைச் சபையார் அநுவசியமான வீண்செலவுகளை நோக்காதிருத்தல் வேண்டுமென்றுங் கூறப்பட்டது. 5வது ஆசிரியக்கல்லூரி ஆசிரியர் ஸ்ரீ. தா. சிதம்பரப்பிள்ளையவர்களாற் தாம் முன் இப் பாடசாலைக்குப் பலமுறையும் பிரசங்கத்துக்கு வந்ததென்றும் முன்னிருந்ததிலும் படிப் படியாகச் சாதித்து வேஷமற்று விட்டதென்றும் இன்றைக்கு வெகு ஆனந்தமாயிருக்கென்றுங் கூறப்பட்டது. 6வது சபாநாயகம் அவர்களொழுந்து இப்பாடசாலையார் இலங்கைக்கு ஓர் முன்மாதிரியைக் காட்டினார்களென்றும் தாய்நாடாகிய இந்தியாவிலே சுயராட்சியங் கட்சியாரால் தாழ்ந்த சாதியாரைச் சேர்க்கும் நோக்கமாக இப்படியநேக பாடசாலைகளைத் தாபித்து நடத்துகிறார்களென்றும் இந்த யாழ்ப்பாணத்திலேயுள்ள தாழ்ந்தசாதியாரை அந்நியமதத்தினர்வந்துகொள்ளையடிக்க தம்மைப்போன்ற சைவ நன்மக்களாகிய பெரியார்களெல்லாம் மௌனஞ்சாதிப்பது தமக்கு அதிக துக்கமென்றும் தற்போது இப்பாடசாலையைத் தாபித்து நடத்துபவர்கள் அந்நியமதத்தினர்களது போராட்டத்தி லிடங்கொடாது கஷ்டப்பட்டும் பாடசாலையை நிலைநாட்டியது தமக்கு அதிசுபோனந்தத்தை விளைத்ததென்றும் அகங்குழைந்துகண்ணீர்விட்டனர். பின்பு தாமிப்பாடசாலைகுள்ளேபுகுந்து தாமெடுத்துக் கொடுத்த பரிசுப் பொருட்களெல்லாம் பெற்றுக் கொண்டவர்கள் தமது பிள்ளைகளென்றும் பரோபகார சிந்தை பூண்டவர்களிப் பொருட்களை யனுப்பத் தாம் அவர்கள்பாற்கிரியைகளைச் செய்தேனென்றும் தம்மிலும் மேற்பட்ட பட்டங்களைப் பெற்றவர்கள் இப்பாடசாலைக்கு வரப்பின்னிற்கமாட்டார்களென்று சத்தியத்துடன் சொல்லுகிறேனென்றும், இப்பாடசாலையால் நீங்கவுங் கூட்டத்தை முடிக்கவுந் தமக்கு விருப்பமில்லையென்றும் பிள்ளைகளின் பாஷை, கீதம் ஒழுக்கம் முதலியன தமக்கு மிகப்பேரானந்தமெனப்பேசி முடித்தனர் பின்பு எல்லா வகுப்புக்கும் வாசினைப் புத்தகங்களையனுப்பிய குருநாகல் வியாபாரி சி. க. ஆறுமுகம் என்பவரால் இவ் யூரிலிருந்து அனுப்பப்பட்ட வந்தனபத்திரம் அப்பாடசாலை ஆசிரியர் வே. தம்பையாவினுல் வாசிக்கப்பட்டது. இப் பாடசாலைப் பிரதமாசிரியர் ஸ்ரீ ம எம். கந்தையா அவர்களால் அக்கிராசனதிபதி முதலிய சபையார்களுக்கு உபசரணை கூறப்பட்டு ஆசிரியர் ஸ்ரீ கணபதிப்பிள்ளை யவர்களாற் தேவாரபாராயணஞ் செய்யப்பட்டுச் சபைசமாப்தியாயிற்று.

—கடிதம்.

## ஸ்ரீமாந். அ. மகாதேவன் அவர்கட்கு

யாழ்ப்பாணம்:

ஐயா,

ஸ்ரீமாந் த. இராமநாதனவர்கள் மத்தியபிரிவில் வசிப்பவராகவும், நாங்கள் நன்கு அறிந்த ஒரு குடும்பத்தில் உள்ளவராகவும் இருப்பதனுல் தாங்கள் பிரதிநிதியாக வருதற்கு விரும்பிய மத்தியபிரிவிலுள்ள நாங்களும் எங்களைச் சேர்ந்தவர்களும் அவரை பேபிரிதிநிதியாகத் தெரிவுசெய்யவேண்டியவர்களாகவிருக்கிறேமென்பதை இக்கடிதத்தினுல் தங்களுக்கு அறிவிக்கிறேம். ஆதலினுல்நாங்களும்எங்களைச்சேர்ந்தவர்களும்தங்கள் சார்பாக நிற்போம் என முன்னரே கூறிய வாக்கை மிக மனவருத்தத்துடன் இத்தால் அழிக்கக் கடமைப்பட்டிருக்கிறேம். ஸ்ரீ இராமநாதனவர்கள் எங்கள் பகுதிப் பிரதிநிதியாக வருவாரென்பதை முன்னரே அறிந்திருப்போமாயின் தங்கள் பக்கத்திற் சேருவோமென வாக்குக் கூறியிருக்கமாட்டோம்.

மேலே கூறிய நியாயங்களினுல் தாங்கள் எங்கள் குற்றத்தைப் பொறுத்துக் கொள்ளுவீர்களென நம்புகிறேம்.

| | | |
|---|---|---|
| கா. அப்புக்குட்டி | வியாபாரி | உரும்பராய் |
| சி. தம்பையா | குத்தகைகாரன் | ,, |
| சு. அருணாசலம் | சுதேச வைத்தியர் | ,, |
| மு. வேலுப்பிள்ளை | கமக்காரன் | ,, |
| மு. சிவசம்பு | ,, | ,, |
| சி. காசிப்பிள்ளை | வியாபாரி | ,, |
| ச. குமாரசுவாமி | ,, | ஊரெழு |
| இ. வல்லிபுரம் | கமக்காரன் | ,, |
| A. அருணாசலம் | சுதேச வைத்தியர் | நீர்வேலி |
| R. சேனாதிராசா | கமக்காரன் | கைதடி |
| சே. கந்தையா | தனவந்தர் | ,, |
| வே. நாகலிங்கம் | ,, | ,, |
| க. சிதம்பரப்பிள்ளை | ,, | கோப்பாய் |
| S. குமாரசாமி | ,, | ,, |
| க. ஆறுமுகம் | ,, | சிறுப்பிட்டி |
| க. கனகசபை | வியாபாரி | புத்தூர் |
| K. தாமோதரம்பிள்ளை | தனவந்தர் | கரணவாய் தெற்கு |
| மு. சின்னப்பு | ,, | அச்சுவேலி |
| C. செல்லையாபிள்ளை (இக்கம்) | ,, | ,, |
| கா. இராசகுலசூரியர் | ,, | ,, |
| S. யோன் இராசா | பிறப்பிறப்புப்பதிவுகாரன் | ,, |
| T. தம்பிமுத்துப்பிள்ளை | பத்திராதிபர் | ,, |
| K வேலுப்பிள்ளை | ,, | உரும்பராய் |
| ச. வேலுப்பிள்ளை | சுதேச வைத்தியர் | வளலாய் |
| த. அருளம்பலம் | தனவந்தர் | ,, |
| சு. அருணாசலம் | ,, | ஆவரங்கால் |
| வே. செல்லையா | சுதேச வைத்தியர் | ,, |
| வே. மயில்வாகனம் | தனவந்தர் | மீசாலை |
| சி. கந்தையா | ,, | ,, |
| மு. வேலுப்பிள்ளை | ,, | மந்துவில் |
| வா. சுப்பிரமணியம் | சுதேச வைத்தியர் | தென்-இயற்றாலை |
| வீ. சிதம்பரநாதன் | தனவந்தர் | வரணி |
| தா. வைத்தியலிங்கம் | ,, | மட்டுவில் |
| ச. சின்னையா | ,, | நாவற்குழி |
| ந. சரவணமுத்து | உபாத்தியாயர் | ,, |
| S. சந்திரசேகரம் | தனவந்தர் | ,, |
| சு. குழந்தைவேலு | ,, | மறவன் புலம் |
| V. ஹோல் | பிரசித்தநொத்தாரிஸ் | சாவகச்சேரி |
| க. வல்லிபுரம் | வியாபாரி | ,, |
| N. செல்லத்துரை | தனவந்தர் | ,, |
| அ. ஞானசேகரம் | சுதேச வைத்தியர் | சரசாலை |
| V. தப்பு | தனவந்தர் | நுணாவில் |
| சி. பொன்னம்பலம் | ,, | விடத்தற்புலம். |

நாங்கள் இப்பொழுது அநுசரித்துக்கொள்ளும் முறையினுல், எங்களுக்குந் தமக்குமிடையே பரஸ்பரமிருந்த உடன்பாடு நீங்கிவிட, தாங்கள் தங்கள் இஷ்டப்படி கொழும்புப் பிரதிநிதியாகத் தெரிவுசெய்யப்படுதற்கான முயற்சிகளைச் செய்து அநுகூல முறுவீர்களெனக் காத்திருக்கின்றேம்.

(Miz. 450).

## லஞ்சப் பிரீதி.

உலகமெங்கும் லஞ்சத்தின் அமுலினுலேயே பல காரியங்களும் நடைபெறுகின்றன. எவருக்கு எந்த வேலை ஆகவேண்டுமாஞலும், அதற்குள்ள கட்டணத்தையுங் கொடுத்து, கூட லஞ்சமும் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. இந்த லஞ்சப்பிரீதி, எல்லார்க்குமிருக்கிறது. சொற்ப சம்பளக்காரரும், அதிக சம்பளக்காரரும் லஞ்சம் வேண்டுகிறார்கள். சொற்ப சம்பளக்காரர்கள் சொற்பமாக லஞ்சம் வாங்கினுல், அதிகச் சம்பளம் பெறுவோர்கள் அதிக லஞ்சம் வாங்குகிறார்கள். சொற்ப சம்பளம் பெறுவோர்கள் தம்முடைய குடும்பத்தின் செலவை நிர்வகிக்கத் தகுந்த ஊதியம் பெறுகிறுப்பதால் லஞ்சமும் வாங்கித் தம் குடும்பத்தை நடத்துகிறார்கள். அதிகச் சம்பளம் பெறுவோர்கள் தம்முடைய சம்பளத்தில் செலவு செய்து விட்டு மீதியும் சேர்த்து வைக்கின்றார்கள். இது போதாமல் லஞ்சமும் வாங்கிச் சேர்த்துப் பொருளாளியாகப் பார்க்கிறார்கள். ஒவ்வொருவரும் லஞ்சத்தில் பிரியம் வைப்பதனுல் எவ்வளவோ அநியாயங்கள் செய்ய நேரிடுகிறது. மனச்சாட்சியைப்பின் செல்லும் உத்தம புருஷர்கள் ஒருக்காலும் லஞ்சம் வாங்கவும் மாட்டார்கள். நியாயமான காரியங்களையே செய்ய ஆசிப்பார்கள். அநியாயம் செய்யப் புகுந்த புண்ணியவான்கள் லஞ்சம்வாங்க அஞ்சமாட்டார்கள். இது தெய்வத்திற்கு ஒவ்வுமா? ஒவ்வொருவரும் தம்முடைய தருமத்தினின்றும் பிறழாமலிருக்க வேண்டியது, கடமையன்றே இதை ஒருவரும் இக்காலத்தில் லக்ஷியம் செய்வதாகத் தெரியவில்லை. கலிபுருஷனுகிய புண்ணியவானின் விசேஷத்தால் இவ்விதம் நடைபெறுகின்றது போலும்! யாரும் இக்காலத்தில் தருமமாவது? அநியாயமாவது? எல்லாம் "ஒன்றுதான் என்று சொல்லிக்கொண்டு செய்யக்கூடாத அநியாயங்களையெல்லாம் செய்து, பாவமூட்டையைக் கட்டிக் கொள்ளுகின்றனர். லஞ்சம் வாங்கப் பிரியங் கொள்பவர்கள் முக்கியமாய் உத்தியோகஸ்தர்களே யென்று சொல்லலாம். உத்தியோகஸ்தர்களிடம் தான் அதிகாரம் அடங்கி இருக்கிறது. அந்த அதிகாரத்திற்குக் குடிகளெல்லாம் ஐக்கியப்பட்டவர்களல்லவா? உத்தியோகஸ்தர்களெல்லாம் குடிஜனங்களுடைய நன்மைக்காகவே வந்தவர்களெனபதை யவர்கள் தம் மனதிற் கொள்வதில்லை. உத்தியோகஸ்தர்கள் தம்மைப் புலிகளென்றும் குடிகளைப் பசுக்களென்றும் நினைத்துக் கொண்டு குடிகளை ஓட ஓட மிரட்டுகின்றனர். குடிகள் என்செய்வார்கள் பாவம்! ஈசா? "இதுவும் உன் திருவிளையாடல்தானே?" வென றேங்கிப் பரிதபிக்கின்றனர். உத்தியோகஸ்தர்கள் குடிகளைக் கருவழித்துவிட எண்ணுகிறார்களென்றே நினைக்க வேண்டியிருக்கிறது. குடிஜனங்கள் எந்தக் காரியத்தை முன்னிட்டும் உத்தியோகஸ்தர்களிடம் சென்று விட்டால் போதும்! அப்போது அவர்களைக் கண்டதும் உத்தியோகஸ்தர்கள் இன்றைக்கு இவர்களிடம் என்ன கேட்கலாமென்றே எண்ணமிடுகிறார்கள் இக்கருத்தைக் கொண்ட உத்தியோகஸ்தர்கள் குடிகளிடம் எப்போதும்முகம்கொடுத்தேபேசுவது கிடையாது. தமக்கு ஏதேனும் லாபத்தை முன்னிட்டு வழிபிறந்தால் அவர்களிடம் மிகப் பிரியமாகப் பேசத் தலைப்படுகின்றார்கள். அவர்களிடம் தாங்கள் வாங்கக் கருதியவைகளைக் கைப்பற்றிக் கொண்டபிறகு மறுமுறை தடவை அக்குடிகள் தம்மிடம் வந்தாலும் புதியமனிதர்களைக் காண்பதுபோலவே காண்கிறார்கள். இப்படிக் காட்டிக்கொண்டால் தானே இன்னும் ஏதேனும்அவர்களிடமிருந்து பிடுங்கலாம். இதன் நடுவில் அக்குடிகளை எவ்வளவு தூரம் பயப்படுத்தவேண்டுமோ அவ்வளவுக்கும் உத்தியோகஸ்தர்கள் பயப்படுத்தி விடுகிறார்கள். குடிகளும் எதிர்த்துப் பேசமாட்டாமல் சும்மா இருந்துவிடுகின்றார்கள். பிறகு அவர்கள் கேட்டவைகளைத் தங்களிடம்இல்லாவிட்டாலும் போனுல் போகட்டுமென்று கருதி மனவருத்தத்துடனே கொண்டுவந்து தொலைக்கின்றனர். குடிகளுக்கு இராத்திரிக்குச் சாப்பிடவழியில்லாவிட்டாலும் கடன்வாங்கியாவது உத்தியோகத்தர்களுக்குக் கொடுத்துத் தரித்திரர்களாகின்றனர். கரும்பு ருசித்தால் வேரோடு பிடுங்க வேண்டியது தானே! உத்தியோகஸ்தர்கள் தம்வேலையைச் செய்துகொண்டு போகும்போதே யார் யார் தலையில் அடிக்கலாம் என்று கருதுகின்றனர். இதனுல் குடிகள் தம் தலைவர்மீது பிரியங் காட்ட மனங்கொள்வதில்லை. உத்தியோகஸ்தர்கட்கெல்லாம் "கொடுத்தால் நல்லவன், கொடுக்காவிட்டால் கெட்டவன்" என்பதே முக்கிய கருத்து. குடிகளுள் இரண்டொருவர் மனஸ்தாபப்பட்டுச் சண்டையிட்டுக்கொண்டால்தான் உத்தியோகஸ்தர்கட்கு வரும்படிவர வழியுண்டாகின்றது. சண்டையில் அடிபட்டவன் பிராது கொடுக்கும்போதே தன்னுடைய பிராதை எங்கே கவனிக்காமல்விட்டுவிடுவார்களோ என்ற எண்ணத்தினுல் அப்படிக் கவனிக்காமல் விட்டுவிடாதபடிக்குத் தன்கையை நீட்டி ஏதேனுங் கொடுக்க முற்படுகிறுன். அடிபட்டவனே இங்ஙனமாகும்போது, அடித்தவனுக்குச் சொல்லவேண்டுமா? அடித்தவன் தன்மேல் இருக்கும் தப்பிதத்தை மறைத்துக்கொள்வதற்குத் தகுந்தஏற்பாட்டைத் தேடிக்கொள்ளுகின்றுன். இதனுல் இதை விசாரிக்கப்புகுமுன்னமே இரு

திறத்திலும் லஞ்சம் வந்துவிடுகின்றது. பின்னர் நடக்கக்கூடியவைகளைச் சொல்லவும் வேண்டுமோ? அதிகார ஸ்தானத்திலிருக்கும் உத்தியோகஸ்தர்கள் லஞ்சத்திற்குப் பிரியப்பட்டால், அவர்கள் தம் நியாயத்தைச் சரிவரச் செய்வார்களென்று நம்புவதற்கிடமில்லை. குற்றஞ் செய்தவன் தன்னைக் காப்பாற்றிக்கொள்வதற்காக, பலவிதங்களிலும் லஞ்சங் கொடுக்கப் பிரியப்படுவான். அக்குற்றஞ் செய்தவனை அடக்கிவைக்கும் இடத்தில் இருக்கும் உத்தியோகஸ்தர்கள், அவன் தரும் லஞ்சத்திற்குப் பிரியப்பட்டு, தம்முடைய மனச் சாட்சிக்கு விரோதமாகவும், கடவுளுடைய சம்மதத்துக்கு விரோதமாகவும், தரும நியாயத்துக்கு விரோதமாகவும் அவனை அடக்காமல் விட்டுவிட்டால் அவன் ஏற்கனவே செய்துள்ள குற்றத்தை அங்கீகரித்ததாகவும், இனிமேல் அவன் செய்யப்போகுங் குற்றங்களுக்குப் பக்கபலமாக இருப்பதாகவும் ஏற்பட்டுவிடும். குற்றஞ் செய்த ஒருவன் யாதொரு தண்டனைக்கும் உட்படாமல் இருப்பானானால், அவனைப் பார்க்கும் மற்றோரும் அவனைப்போலவே, மாறிவிடப் பூரணமாய் எண்ணங் கொள்ளலாமன்றோ? இதனால் எங்குங் குற்றஞ்செய்வோர்கள் அதிகமாகப் பெருகுவார்களென்பதில் என்ன தடை. இவைகளையெல்லாம் யோசித்துப் பார்க்கும்போது, லஞ்சமே சகல நீக்காரியங்களையும் நடத்துவிக்க உடந்தையாக இருக்கிறதென்பது பெறப்படும். உத்தியோகத்தில் அமர்ந்திருப்போர்கள் யாரும் தெரியாதவர்களாக இருக்க மாட்டார்கள். ஆனால் அதிகமாகப் படித்தும், உலக அனுபவம் எல்லாம் தெரிந்தும் தம்முடைய சம்பளத்தையுங் கடந்து அவர்கள் லஞ்சம் வாங்கத் தலைப்படுவதென்பது மிக்க வியப்பையே தரா நிற்கும். ஆனால் லஞ்சத்தின்மேல் பிரியம் ஏற்படுவதற்குக் காரணங்கள் பேராசையும், பெற்றவரையில் திருப்தியில்லாமையுமே யாகும். பேராசையின் காரணமாக லஞ்சம் வாங்கும் பெரிய மனிதர்கள் கூடிய சீக்கிரத்தில் தம்முடைய நிலையினின்றும் மாறுதலடையக் கூடும். பிரதிதினமும் அவர்கள் மனதில் பெரும் பீதி குடி கொண்டிருந்து, அவர்களைச் சதா பயமுறுத்திக் கொண்டேயிருக்கும். அவர்கள் வாங்கும் லஞ்சம் எங்கே மேலுக்கு தெரிந்து விடுகிறதோ என்ற அச்சம், அவர்களைக் கனவிலும் விட்டபாடில்லை தாம் லஞ்சம் வாங்கும் காரணத்தால் யாதொரு பிழையும் புரியாதிருந்தாலும் மேல் அதிகாரிகளைக் கண்டால் மிகப் பயந்து நடுங்கவேண்டி வரும். லஞ்சத்தில் ஆசைவைக்கும் எமது சகோதரர்கள் நீண்ட காலம் வரையில் அதே உத்தியோகத்தி லிருப்பவர்களென்று எண்ணுவதை அந்தலஞ்சமானது தடைப்படுத்துகிறது. லஞ்சத்தைப் பெற்றுக் கொண்டு பாடுபடும் சகோதரர்களை யெவரும் உள்ளன்போடு நம்பி விடமாட்டார்கள். யாருக்கும் லஞ்சப் பிரியர்கள் மீது நம்பிக்கையே அற்றுவிடும். நீர்வழி சோரை யென்பதுபோல் அவர்கட்கு எந்தப் பக்கத்தில் கைநீட்டுகிறார்களோ அந்தப் பக்கத்தில்தான் அவர்களும் வேலை செய்ய முற்படுவார்கள். பணம் பத்தும், எட்டும் செய்யுமல்லவா? அப்பணந்தானே குற்றவாளியை நிரபராதியாகவும், நிரபராதியைக் குற்றவாளியாகவும் மாற்றிவிடுகின்றது. லஞ்சத்தி லீடுபட்டுழைக்கும் ஒவ்வொரு உத்தியோகஸ்தருடைய அளவையும் அறிஞர்களறிந்திருப்பார்களாகையினால் ஒவ்வொரு உத்தியோகஸ்தருடைய தன்மையையும் இவண் விஸ்தரிப்பது அவசியமின்று. ஆனால் இவ்வுரையை யார் கடைப்பிடித்து லஞ்சம் வாங்குவதினின்றும் நீங்க நினைக்கிறார்களோ, அவர்களே உத்தமராவர்.

—தேச சேவகன்.

## "சுதேசி".

தேசிய வாரமிருமுறைப்பத்திரிகை, பத்திராதிபர், பி. கோதண்டராமன் எம். ஏ. பி எல். தற்கால அரசியலைப்பற்றியும், சமுதாய விஷயங்களைப்பற்றியும், சுருக்கமாயும், விளக்கமாயும் உலகத்தில் நடைபெறும் விஷயங்களைப்பற்றியும் அறியவேண்டியவர்கள் இப்பத்திரிகையைப் படிக்கவேண்டும்.

சந்தாவிபரம.

வருட சந்தா ரூபா 7.
6 மாதச் சந்தா ரூ. 3 அணா 12
3 மாதச் சந்தா ரூ 2;
1 மாத சந்தா ரூ. அணா 11

14, வாணியா தெருவு,
சென்னை.

## அஷ்டபந்தன மருந்து.

இந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்ட சுத்தமான சரக்குகளைக் கொண்டு செம்மையாகச் செய்யப்பட்ட சுவாமிக்குச் சாத்தும் அஷ்டபந்தனமருந்து எம்மிடத்தில் விலைக்கிருக்கிறது.

சு. வைத்தியநாதக்குருக்கள்,
சிவன்கோவில்,
வண்ணார்பண்ணை.

(H. 21.)

## அறிவித்தல்.

இத்தாற்சகலருமறிய வேண்டியது ஐக்கிய மலாய் நாட்டைச் சேர்ந்த வாக்கனடாத்தோவிலிருந்து தற்போது யாழ்ப்பாணம் மல்லாகத்திலிருக்கும் கார்த்திகேசு துரையப்பாவாகிய நான யாழ்ப்பாணம் மல்லாகம் நாகமுத்து இல்லையம்பலத்திற்கு 1922ஞு தைமீ 21 திகதி 228ம் இலக்கத்தில் டெல்கான்சன் மாஜிஸ்டேட் மூலமாக முடித்துக் கொடுத்த அற்றோணித்தத்துவத்தை இதனால் அழித்து விடுகிறேன். இனிமேல் அவருடைய எச்செயலுக்கும் நான் பாத்திரவாளியாய் இருக்கமாட்டேன்.

இப்படிக்கு,
கா. துரையப்பா.

மல்லாகம்,
25—2—1924.

(Mis. 447)

## புத்தக விளம்பரம்.

தெல்லிப்பழை பிரம்மஸ்ரீ வித்துவான் சிவானந்தையரால், இயற்றிய புத்தகங்கள் என்னிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

1. தருக்கசங்கிரகம், நியாயபோதினி, பதகிருத்தியம், அன்னப்பட்டீயம், நீலகண்டீயம், சேர்ந்த கட்டுவிலை ரூபா 2 00
2. நம்பி அகப்பொருளுரை ரூபா 1 00
3. இரகுவமிசம் மூலமும் உரையும் முற்பாகம் ரூபா 1 சதம் 50
4. சனிதுதி விலை அணா 1
5. தசகாரியம் அணா 5

க. செல்லம்ஐயர்,
சிவன்கோவில் வடக்குத்தெரு,
வண்ணார்பண்ணை.

சண்முகநாதன் புத்தகசாலையிலும் பெற்றுக் கொள்ளலாம். (H. 26.)

## திறமான மங்களூர் ஓடுகள்

மெஸ்சேர்ஸ் மோர்க்கன் அண்கோ அல்வாரிஸ் அண்கோ நிறமோடுகளும் அரையோடுகள், முகட்டோடுகள், காற்றோடுகள், பீலியோடுகள், கண்ணாடியோடுகள், சித்திர சகிதமான ஓடுகள் தளவரிசைக்கற்கள், பூச்சட்டிகள் நிறம் போட்லாந்து சிமெந்து முதலானவைகளும் சகாயமான விலைக்குப் பின்வரும் விலாசத்தாரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

கா. வ. சுப்பிரமணியம்,
ஓட்டுக்கம்பெனி,
தேவரீர்குளம்,
யாழ்ப்பாணம்.

(H. 23).

## "ஸ்ராண்டேர்ட்" கொழுக்கியோடுகள்.

## (Standard Tiles)

பின்வரும் நியாயங்கள் பற்றியே நாம் இந்த ஸ்ராண்டேர்ட் ஓடுகளைத் தருவித்து விற்கின்றோம்:—

முதலாவது, இந்த ஓடுகள் மிகப்பாரங்குறைந்தனவும்

இரண்டாவது, இவைகள் நெடுங்காலத்திற்கு நின்று பிடிக்கத்தக்கன.

மூன்றாவது, இந்த வட இலங்கையின் தேச சுவாத்தியத்திற்கு இயைந்தஓடுகள் இவைகளேயாம். இந்த ஓடுகள் உஷ்ணகாலங்களிற் குளிர்ச்சியையும் சீதளகாலங்களில் உஷ்ணத்தையும் தரும் தன்மையன.

இந்த ஓடுகளைச் சென்ற மூன்றுவருடகாலமாக நாம் தருவித்து விற்றுவருகின்றோம். இந்த மூன்றுவருட காலத்துள் நாங்கள் ஆச்சரியப்படத்தக்க விதமாக இவை செலவழிகின்றன. மற்றும் ஓடுகளிலும்பார்க்க இது சிறந்ததென்பதற்கு இந்த ஒருநியாயமுமே போதிய சான்றாகும்.

ஓடுகள்யாழ்ப்பாணத்திலும் வல்லுவெட்டித் துறையிலும், பருத்தித்துறையிலும் எங்களிடம் பெறற்பாலன.

S. வீரகத்திப்பிள்ளை.

தந்திவிலாசம்,
"Ruby" வல்லுவெட்டித்துறை.
(H. 25.)

## பித்தளை டம்ளர்கள்.

இந்திய கைத்தொழிலை ஆதரியுங்கள்!

உயர்ந்த பித்தளைத் தகட்டினால் செய்யப்பட்டது. அழகான நகாஸ் வேலைகள் செதுக்கப்பட்டதோடு பார்வைக்குப் பழபழப்பாகவிருக்கும்.

நகாஸ் வேலை செய்யாத சாதா டம்ளர்களும் உண்டு.

நகாஸ் டம்ளர் 3கொண்ட செட் 1க்கு ரூபா 1/12.
சாதா டம்ளர் 3 கொண்ட செட் 1க்கு ரூபா 1/9.



கே. எஸ். முத்தையா & கம்பனி,
"ஸில்க் ஹவுஸ்" காசி.

Y. 23)

## இனும்! இனும்!! இனும்!!!

இதனடியில் கண்ட மருந்து வாங்குகிறவர்களுக்கு மட்டில்

வைத்திய சாஸ்திரத்தில் அதிக அநுபவமுள்ள ஹக்கீம் K. முகம்மது யூசுபு அவர்களால் செய்யப்பட்ட (வைத்திய சாஸ்திர நீதியால்) 96 பக்கம் அடங்கிய புஸ்தகம் ஒன்று இம்மருந்துடன் இனுமாக அனுப்பப்படும். மானிட சரீரத்தில் பாவும் பல கோய்கள் வீரியபலஹீனங்கள் நரம்புத் தளர்ச்சிகள் வீரிய நஷ்டத்தின் விபரங்கள் அது ஜனித்த காரணங்களையும் அதன் குணங் குறிகளையும் அதற்கு மருந்தும் பரிகாரமும் சரீரத்தில் உள்ள சில ரகசியமான விஷயங்களையும் வைத்தியரிடம் வெளிப்படுத்தாமல் தனக்குத் தானே அறிந்துகொள்ளக்கூடிய அருமையானதோர் சாஸ்திரமாயிருக்கின்றது.

அவுஷதங்களில் அருமையான வித்தை.

ஜெகப்பிரசித்தி பெற்ற

# சிட்டுக்குருவி அமிர்த லேகியம்.

பலமில்லாமல் தளர்ந்து சோர்வடைந்த நரம்புகளையும் உலக வாழ்க்கையில் பிரியமில்லாமல் சஞ்சலப்படும் மனதையும் ஒருவேளை லேகியம் சாப்பிட்ட பிறகு ஆச்சரியப்படும்படி நரம்புகளுக்குப் பலமும் திமிரும் உண்டாக்கும்.

பரீட்சைக்கும் பலனுக்கும் உத்திரவாதமுள்ள உண்மை அவுஷதம்
குணமில்லையென்று ருபிக்கிறவர்களுக்கு பணத்தைத் திருப்பிக் கொடுக்கப்படும்.

வீரியபுஷ்டியையும் மன உற்சாகத்தையும் கொடுப்பதில் இதற்குச் சமமாய் எதைக் காட்ட முடியும். இதனை அநுபவித்தவர்கள் இப்பெருமை தங்கிய மருந்திற்கு உள்ள அபூர்வ சக்தியைப்போலே இவ்வுலகத்தில் வேறு எந்த மருந்திற்கும் இல்லையென்று அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் எழுதியிருக்கிறார்கள்.

அன்பனே! இதுவரையிலும் வீரியதத்துவத்திற்காகவும் நாடி நரம்பு களின் உற்சாகத்திற்காகவும் மூளையைப் பலப்படுத்தி ஞாபகசக்தியை விர்த்திசெய்யவும் தேககாங்கையினால் நீற்றுப்போகும் பலஹீனம் பற்பல வாய்வுரோகம் இடுப்புவலி கைகாலசதி மலச்சிக்கல் பசிமந்தம் இவைகளுக்கெல்லாம் எத்தனையோ விதமான அவுஷதங்கள் சாப்பிட்டிருப்பீர்கள். அவைகளுக்கெல்லாம் இது முதல்தரமான மருந்தென்று தங்களின் சிநேகிதர்பால் புகழ்ந்து பேசுவீர்கள், பத்தியமில்லை.

முக்கிய கவனிப்பு—சில போலி சிட்டுக்குருவி லேகியங்கள் ஆயிரக்கணக்கான ரூபாய் இனுமென்று சபதங்கள் கூறிக்கொண்டு பல விளம்பரங்கள் வெளிவந்துகொண்டிருக்கிறபடியால எமது விலாசத்தைக் கவனித்து ஆடர் செய்யவேணும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 40 நாள் | 80 வேளை | டப்பி 1க்கு | விலை | ரூபா | | 10—0—0 |
| 20 ,, | 40 | ,, | ,, | ,, | ,, | 5—0—0 |
| 10 ,, | 20 | ,, | ,, | ,, | ,, | 2—8—0. |

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

இந்தியா, பர்மா, சிலோன் இம்மூன்று தேசங்களுக்கும் வி. பி. யில் மருந்து அனுப்புவோம. பினங்கு, சிங்கப்பூர், மற்ற மலாய் தேச வாசிகள் மருந்தின் கிரயமும், பார்சல் செலவு ரூபா 2ம் சேர்த்து முன்பணம் அனுப்பினால் மட்டில் மருந்து அனுப்பப்படும்.

விலாசம்.

ஹக்கீம் கா. முகம்மது யூசுபு,
முகம்மதியா வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை, (தென்னாற்காடு ஜில்லா)

Hakeem K. Mohamed Yoosoof,
*Mohamedia Medical Hall,*
Porto-Novo, S. A. Dt.(India).

(H. 27.)

# The Manager N. Mohamed Ally & Co.,

Medical Hall, Porto-Novo, S. A. District.

துரைகளே! கவனியுங்கள்!!

இழந்துபோன பலத்தையும், தளர்ந்துபோன நரம்புகளையும்
சரிப்படுத்தி ஒரேவேளை லேகியம் சாப்பிட்டபிறகு
பலத்தைக் கொடுக்கும் மெடல் பெற்ற

# "சிட்டுக்குருவி கிருத லேகியம்."

வெண்பா.

பூவிரணம் போக்கிவிடும் பொல்லாக் கிருமிகளைப்
பாவுமலத் தோடிறக்கிப் பண்ணுங்காண்—பூவினையிற்
கட்டேற்ற மாதர்களைக் கைகுவித்துக் கொஞ்சுவிக்கச்
சிட்டேக் குருவித் திறம்.

இந்தச் சிட்டுக்குருவி கிருதத்தின் லேகியத்தைப்போல் மற்ற
வைத்தியர்கள் செய்து கொடுத்தால் 2,000 ரூபாய் இனும்.

☞ நண்பிற் குகந்த அன்பர்காள்! அருமையும், பெருமையும், கீர்த்தியும் பெற்ற இந்த அற்புத குணந்தங்கிய லேகியத்தை உபயோகித்த உத்தமர்கள் மண வாழ்க்கையில் சுகானந்த இன்பத்தை யடைவார்கள். ஆஹா! குணத்தால் சிறந்ததுதான் என்று இதனைப் பன்முறையும் புகழ்வார்கள்.

லேகியத்தின் குணமாவன:—வாத பித்த சிலேத்ம மிகுதிக் குறைவால் ஏற்படும் ரத்தக் குறைவு, பலஹீனம், அஸ்தி, வெட்டைச்சூடு, வீரிய நஷ்டம், நரம்பு தளர்ச்சி, ஆண்குறி சிறுத்தல், சதா இடுப்புவலி, மலச்சிக்கல, பசிமந்தம், பித்தாதிக்கஉஷ்ணவாயுவு, கிருமி ரோகம், நீர்நீர் வியாதிகள், தேகத்தில் ஒடித்திரியும் பலவித வாய்வுரோகம, பாரசவாய்வு, நெஞ்சுவலி, (Nervous Diseases.) விரைவாதம், கைகாலசதி, மயக்கம், மறதி, ஆண்தன்மை நாளுக்குநாள் குறைதல் முதலியன நிவர்த்தியாகிவிடும். தேக உஷ்ணத்தை சமனப்படுத்தி இரத்தத்தை விருத்திசெய்து நரம்புகளில் ஓடச்செய்து சப்ததாதுக்களை வலுப்படுத்தி, வீரியத்தைக் கெட்டிப்படுத்தி ஆண்தத்துவத்தை விர்த்திசெய்து புத்தி சாதுர்யத்தைக் கொடுத்து தத்துவமிழந்த கிழவர்களையும் பால்ய பருவ ஆண்சிங்கமாக்கிவைக்கும். ஸ்திரீசம்பன்னராய் வாழும் புருஷர்களுக்குப் பால்ய பருவ துர்ச்செய்கையால் நடுப்பிராயத்தில் ஏற்படும் வீரியநஷ்டத்தை மறுபடியும் உண்டாக்குவதற்கு இதைவிட மருந்து வேறில்லை. சுத்தமாய் ஆண்தன்மை அற்றுப்போன கிழவர்களையும் இந்த லேகியம் இல்லற இன்பத்தை அநுபவிக்கும்படி செய்கிறது. இந்த மெடல் பெற்ற சிட்டுக்குருவி கிருத லேகியம் சாப்பிட்டு குணமில்லையென்று சத்தியமாய்ச் சொன்னால் அவர்களுக்கு எமது கம்பெனியிலிருந்து ரூபா 1,000 இனும் கொடுக்கப்படும். ஓர் தடவை பரீட்சை செய்யவும்.

40-நாளைக்குச் சாப்பிடும் 16-பல டப்பி விலை ரூபா 10—0—0.
20-நாளைக்குச் சாப்பிடும் 8-பல டப்பி விலை ரூபா 5—0—0.

☞ பினங்கு, சிங்கப்பூர், கிள்ளான், குவாலாலம்பூர், பேரு முதலிய பிற தேச வாசிகள் மருந்தின் கிரயமும் தபாலசார்ஜ் ரூபா 2-0-0யும் சேர்த்து முற்பண மனுப்பி மருந்து பெற வேண்டும். வி. பி. யில் அனுப்பும்படி எழுதும் கடிதங்கள் அங்கீகரிக்கப்படமாட்டா. விலாசம் தெளிவா யெழுதவும் வியாபாரிகளுக்கு 100-க்கு 10 வீதம் கமிஷன் கொடுக்கப்படும்.

☞ எமது விலாசம்:—மானேஜர்,
என். முகம்மது அலி அண்டு கம்பெனி
மெடிக்கல் ஹால்,
பரங்கிப்பேட்டை, தென்னாற்காடு, ஜில்லா.

☞ எமது சிலோன் ஏஜண்டுகள்,
S. M. M. அப்துல்காதர் & கோ.,
பேன்சி குட்ஸ்மேட்சந்து, ஸ்ரேசந்திரோட்டு,
வண்ணார்பண்ணைபோஸ்டு, யாழ்ப்பாணம்.

(M. 31.)

வான்முகில் வழாது பெய்கமலி வளஞ் சுரக்கமன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by S. Ampikaipagan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.